**சார்பு நீதிமன்றம், துறையூர்.**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**OS.No.58/2023**

தேதி: 30.01.2026

பெயர் : செல்வம் (பி.வா.சா.1) த/பெ: பெருமாள்

**குறுக்குவிசாரணை**

1. வழக்கு வாதியை எனக்கு தெரியும். அவர் என் அக்கா வீட்டுக்காரர். வழக்குரை விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் நானும் ஒரு பிரதிவாதி என்றால் சரிதான். நான் தனிப்பட்ட முறையில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் சார்பாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்களா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். எதிர்வழக்குரையில் என்ன விவரம் கூறி தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். எதிர்வழக்குரை காத்தான் தாக்கல் செய்தார். நான் வெங்கடாஜலபுரம் கிராமத்தில் ஊருக்குள் குடியிருக்கிறேன். தாவா சொத்து பக்கத்தில் காத்தான் குடியிருக்கிறார். எனக்கு 48 வயதாகிறது. என் முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் வாதி 1995ம் தேதி கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளேன் அப்போது எனக்கு வயது 17 ஆகும். கிரைய பத்திரம் முழு விவரம் எனக்கு தெரியாது என்றால் கிரையம் செய்த போது எனக்கு தெரியாது. 08.05.1974ம் தேதி ஆனைக்குட்டி முத்துராஜா, மனைவி மற்றும் மகன்கள் சேர்ந்து கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் அந்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். அந்த பத்திரத்தில் எத்தனை சொத்துகள் கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது.

2. தாவா சொத்தில் உள்ள சர்வே எண்.155/3 அந்த கிரைய பத்திரத்தில் எத்தனையாவது அயிட்டமாக காட்டி எழுதப்பட்டுள்ளது என எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.155/3 சொத்துக்கு என்ன நான்கெல்லை காட்டி கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என தெரியுமா என்றால் தெரியாது. என் முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் 2 வது

பத்தியில் குறிப்பிட்டுள்ள கிரைய பத்திரம் வா.சா.ஆ.8 என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.8 ஆவணத்தில் என்ன சங்கதிகள் உள்ளது என தெரியாமல் தான் பதிலுரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ.8 ஆவணத்தில் என்ன சங்கதிகள் உள்ளது என தெரியாமல் தான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். ராமையா பத்திரத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியும். இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி என்னுடைய மாமனார் என்றால் சரிதான். அவர் நல்ல ஆரோக்கியமாக உள்ளார் என்றால் சரிதான். எங்கள் தரப்பில் அவரை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளோமா என்றால் ஆமாம். வா.சா.ஆ.8 ஆவணத்தில் 3ம் இலக்கமிட்டவராக தாயன் என்பவருடன் சேர்ந்து 1 முதல் 5 இலக்கமிட்டவர்கள் கிரைய ஆவணம் ஆறுமுககவுண்டருக்கு எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். சர்வே எண்.155/3ல் மொத்த விஸ்தீரணம் 47 சென்ட் ஆகும். அதில் 33 சென்ட் நிலம் ஆறுமுககவுண்டருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள். வா.சா.ஆ.8 ஆவணத்தில் கிரைய தொகையை ஆறுமுககவுண்டரிடமிருந்து எந்தந்த வகையில் வாங்கி கொண்டார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. சர்வே எண்.155/3ன் நான்குஎல்லைகள் என்ன குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என அந்த பத்திரத்தில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் சர்வே எண்.155/3 ஏக்கர் 0.47 சென்ட்டில் செங்காயன் வகையறா நிலத்திற்கும் தெற்கு என்றும், அடியில் கண்ட பொது கிணற்றுக்கு கிழக்கு என்றும், கிழமேல் வாரிக்கு வடக்கு என்றும், எங்களில் 3 இலக்கமிட்டவர் பாகத்திற்கு மேற்கு என்றும் இதன் மத்தியில் 0.33 சென்ட் நிலம் என நான்கெல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3 இலக்கமிட்டவர் என்பவர் தாயன் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் மீதமுள்ள 14 சென்ட் நிலம் 3 இலக்கமிட்ட தாயனுக்கு பாத்தியப்பட்டது என பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் அது சரியல்ல. மேற்படி விவரம் சரியல்ல என எதிர்வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் மேற்படி விவரத்தை கூறியுள்ளேனா என்றால் இல்லை. என் முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் 1974 தேதியிட்ட பத்திரம் குறித்து தெரியும் என நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 14 சென்ட் நிலம் தாயன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என 1974 கிரைய பத்திரத்தில் எழுதப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும் என்றும் தெரியாது என

வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மற்ற பிரதிவாதிகளுக்கும் மேற்படி விவரம் தெரியும் என்றால் தெரியாது. மற்ற பிரதிவாதிகளுக்கு எழுத படிக்க தெரியாது. இந்த வழக்கில் என்னை தவிர மற்ற பிரதிவாதிகள் அனைவரும் என் மாமனார் குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எனக்கு மட்டும் தான் விவரம் தெரியும் அவர்களுக்கு விவரம் தெரியாது என்றால் சரிதான். என் மாமனார் இன்று நீதிமன்றம் வந்துள்ளார்.

4. தாவா சொத்து விவரத்தில் கண்ட சர்வே எண்.155/3 என்ற சர்வே எண்ணில் 14 சென்ட் நிலத்தையும் மற்ற தாவா சொத்து விவரத்தில் கண்ட சொத்துகளையும் கடந்த 27.09.1995 ம் வருடம் இந்த வழக்கு வாதி தாயன் மற்றும் அவரது மனைவி செல்லம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியும். வாதி கிரையம் பெற்ற தாவா சொத்து விவரத்தில் கண்ட விவசாயம் நிலங்கள் தற்சமயம் விவசாயம் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை விவசாயம் செய்யப்படாமல் உள்ளது. தாவா சொத்து விவரத்தில் உள்ள விவசாய நிலங்களுக்கு சர்வே எண்.155/3 ல் உள்ள 14 சென்ட் நிலம் வழியாக தான் செல்ல முடியும் என்றால் இல்லை வேறு வழி உள்ளது. வேறு வழி இல்லை எனவும் வழக்கிற்காக உள்ளதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.155/3 நிலத்தை ஒட்டி கிழமேலாக அரசுக்கு சொந்தமான வாரி வருகிறது என்றால் சரிதான். அந்த வாரியை ஆக்கிரமித்து என் மாமனார் கொட்டகை, வாரியை நிரவி மரவள்ளிகுச்சிகிழங்கு விவசாயம் செய்து வருகிறார் என்றால் வாரியின் ஓரத்தில் விவசாயம் செய்து வந்தார். அந்த பயிர்களை எல்லாம் பிடுங்கிவிட்டார். துறையூர் வட்டாட்சியர் வாரியை ஆக்கிரமித்து செய்து வந்த விவசாய பயிர்கள், கூரைகொட்டகை ஆகியவற்றை அகற்றி கொள்ள காலஅவகாசம் கொடுத்து அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை பெற்று கொண்டு ஆக்கிரமித்த நாங்கள் அகற்றி கொள்ளவில்லை என்றால் சரிதான். அதனால் துறையூர் வருவாய்துறையினர் மற்றும் காவல்துறையினர் சேர்ந்து என் மாமனார் வாரியை செய்திருந்த ஆக்கிரமிப்பை அகற்றிவிட்டார்கள் என்றால் சரிதான். புலவரைபடத்தில் உள்ள அளவு படி தற்போது வாரி ஆக்கிரமிப்பு இல்லாமல் உள்ளது என்றால் சரிதான்.

5. வாதி அவரது நிலத்தில் வாரி வழியாக தான் வந்து விவசாயம் செய்து வந்தார் எனவும் நானும் என் மாமனார் குடும்பத்தை சேர்ந்த மற்ற பிரதிவாதிகளும் வாரியை ஆக்கிரமித்து வாதி

செல்வதை தடுத்து வந்தோம் என்றால் சரியல்ல. துறையூர் வட்டாட்சியர் ஆக்கிரமிப்புகளை அகற்றியும் வாதி வாரி வழியாக செல்வதை நாங்கள் தடை செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. அதனால் தான் வாதி தனது நிலத்தை விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலையில் உள்ளார் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். பி.வா.சா.ஆ.1 1996 கிரைய பத்திரத்தின் அசலா என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.1 பத்திரத்தில் காத்தான் யாரிடம் வாங்கினார் என உள்ளதா என்றால் செல்லதுரை, கோவிந்தராஜிடம் வாங்கியதாக உள்ளது. மேலும் வடகிரி மகன் காத்தானிடம் வாங்கியதாக உள்ளது. மேற்படி 4 பேரும் சேர்ந்து காத்தானுக்கு கிரையம் செய்து கொடுத்ததாக உள்ளதா என்றால் ஆமாம். எனது பதிலுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் 31.01.1996 தேதியன்று 1ம் பிரதிவாதி காத்தான் ஆனைக்குட்டி காமாட்சி தம்பதியின் 3 மகன்களில் தாயன் நீங்கலாக மற்ற 2 சகோதரர்களான பெருமாள் மற்றும் வடகிரி ஆகியோரிடம் கிரையம் பெற்றதாக உள்ளது என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆவணம் இல்லை என்றால் சரிதான்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி 06.02.2026 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.

/ உண்மை நகல்/

(ஒம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்.